LIBRARY
13 NOV 1962
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 27th July 1962.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras at half past eight of the Clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Electricity undertakings (taking over)

* 701 *Q.*—SRI MUNU ADHI : Will the Hon. the Minister for Industries be pleased to state when all the private electrical undertakings in the State will be acquired by the Government?

THE HON. SRI R. VENKATARAMAN : The undertakings willl be acquired gradually and no time-limit has been fixed for their acquisition.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த ஸ்தாபனங்களை அரசாங்கம் எடுத்துக்கொள்வது சம்பந்தமாக கொள்கைதான் என்ன? அதைப்பற்றி ஆராய்வதற்கு தனியாக அதிகாரிகள் நியமித்துள்ளார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கொள்கை இப்போது நான் சொன்னதுதான். நாளடைவில் க்ராஜுவலாக எடுத்துக் கொள்ளப்படவேண்டுமென்பது. இதற்காக அதிகாரிகள் ஒருவரும் நியமிக்கப்படவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இதை எடுத்துக்கொள்வதில் காலதாமதமாவதைக்கூடப் பொருட்படுத்தாமல் இருக்கலாம். ஆனால் தனியார் மின்சாரக் கம்பெனிகளில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கும், மின்சார போர்டில் வேலை செய்யக்கூடியவர்களுக்கும் இடையேயுள்ள ஏற்றத்தாழ்வுகளைப் போக்கவாவது அரசாங்கத்தார் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எந்தவிதமான ஏற்றத் தாழ்வுகள் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : உதாரணமாக, மினிமம் சாலரி, அலவன்சு, க்ராஜுடி, வேலைநேரம் போன்றவை . . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்குத் தனிக் கேள்வி போட்டால் எந்தெந்த விதங்களில் ஏற்றத்தாழ்வு இருக்கிறது என்று பார்த்து பரிசீலனை செய்ய முடியும்.

MR. SPEAKER : Questions 702 to 705, 706, 721 and 730-J have been postponed at the request of the Hon. Minister for Finance.